விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 088 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 03 வெள்ளிக்கிழமை (17.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் பிரதமர் மோடி உறுதி

### அண்ணாமலை தெரிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் பாரதப் பிரதமர் மோடி உறுதியாகவுள்ளார் என பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது டுவிட்டர் பதிவில், இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதில் பிரதமர் நரேந்திர மோடி உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

"இந்தியாவிலிருந்து, சுமார் 200 வருடங்கள் முன்பு 11



## அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு

### தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு

(கொழும்பு)

2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

அதன்படி, மார்ச் 23ஆம் திகதி காலை 10.00 மணிக்கு தேர்தல் செயலகத்தில் 11

## வாகனங்களை மீள இறக்குமதி செய்ய

### பேச்சுவார்த்தை ஆரம்பம்

(கொழும்பு)

வாகனங்களை மீள இறக்குமதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை, இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் ஆரம்பித்துள்ளது.

இதனொரு கட்டமாக, வாகனங்களை மீள இறக்குமதி செய்வதற்கான சாத்தியக் 11

## தமிழர்களின் பிரச்சினைக்கு

# நிரந்தரமான தீர்வு வழங்கப்பட வேண்டும்

### ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)



## இ.போ.ச ஆசனங்களை இணையம் மூலம் முன்பதிவு செய்யலாம்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான நீண்ட தூர சேவை பஸ்களில் ஆசனங்களை இணையத்தில் முன்பதிவு செய்யும் வசதி நேற்று முன்தினம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

மகும்புர பல்வகை போக்குவரத்து நிலையத்தில், நெடுஞ்சாலைகள் இராஜாங்க 11

## உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைந்தது

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 11

## உள்ளூராட்சித் தேர்தலின் மூலம் மக்களின் இறையாண்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும்

### ஐ.நா பிரதிநிதியிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலின் ஊடாக மக்களின் இறையாண்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என ஐ.நா பிரதிநிதியிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி Azusa Kubota மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ ஆகியோருக்கு இடை 11



## வலி.கிழக்கு பிரதேச சபையின்

### உறுப்பினர் மற்றும் அவரது மனைவி மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு பிரதேச சபையின், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் செல்வராசா மற்றும் அவரின் மனைவி ஆகியோர் வாள்வெட்டு தாக்குதலுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் கோப்பாய், மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. 11

## தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை - பஃவ்ரல்

(கொழும்பு)

அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகளை அவதானிக்கும் போது ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. சற்று காலம் தாமதித்தேனும் தேர்தல் நடத்தப்படும் என்று ஆரம்பத்திலிருந்த நம்பிக்கையையும் இப்போது இழந்துவிட்டதாக பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப் 11

PAFFREL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடு தொடர்பில்

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடு தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளரும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையும் இந்த விசாரணைகளின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, விசாரணைகளுடன் தொடர்புடைய முறைப்பாட்டாளர்களும் பிரதிவாதிகளும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எனினும், பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் சமூகமளிக்காமையால், இந்த விசாரணைகளை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியுள்ளது.

விரைவாக தலையீடு செய்து, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி, கால தாமதமின்றி மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்திக்க வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)

# தொழிற்சங்கங்களின் பணிப்புறக்கணிப்பால்

## இ.போ.சவுக்கு 90 இலட்சம் நட்டம்

(கொழும்பு)

தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு காரணமாக, நேற்று முன்தினம் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு, 90 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டதாக அதன் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

பணிப்புறக்கணிப்பு காரணமாக, மக்கள் தங்களது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளியே செல்லாமையே இந்த வருமான இழப்புக்கு காரணமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், நேற்று முன்தினம் தனியார் பேருந்துகளின் வருமானம், 15 முதல் 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

# உழவு இயந்திரத்துடன் யாழ் நகரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

அனுமதிப் பத்திரம் இல்லாமல் மலைவேம்பு மரத்தை வெட்டி எடுத்துச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், உழவு இயந்திரம் மற்றும் மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரத்திற்கும் எந்தவொரு ஆவணங்களும் இல்லை எனவும் கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும், கைப்பற்றப்பட்ட பொருட்களையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். (ம-7.9)

# நாட்டில் இடியமீன் ஆட்சி நிலவுவது போன்ற உணர்வு தோன்றுகிறது

## சுகாதார ஊழியர்கள் சம்மேளனத்தின் ஒருங்கமைப்பாளர்

(கொழும்பு)

நாட்டில் இடியமீன் ஆட்சி நிலவுவது போன்ற உணர்வு தோன்றுவதாக சுகாதார ஊழியர்கள் சம்மேளனத்தின் ஒருங்கமைப்பாளர் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாங்கள் இன்று (நேற்று) காலை அனைத்து மருத்துவமனை பணியாளர்கள், அரச மற்றும் அரச அனுசரணையுடன் இயங்கும் மத்திய நிலையத்திற்கு உரித்தான தொழிற்சங்கங்கள் அனைத்தையும் சேவைக்கு அழைத்துள்ளோம். குறிப்பாக நாங்கள் அரசாங்கத்திற்கு ஒரு சமிக்ஞையை வழங்குவதற்கே முயற்சி செய்தோம். 24 மணித்தியால போராட்டமாகவே நாங்கள் அதனை முன்னெடுத்தோம். ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு எச்சரிக்கையை விடுக்கும் முகமாக இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் ஓய்வு பெற்ற சில தொழிற்சங்க தலைவர்களின் பிழையான கருத்து வெளியீடுகளை சரிப்படுத்தும் நோக்கில் நாங்கள் எங்களின் விளக்கத்தை வழங்கியுள்ளோம். இந்த நிலையில் நேற்றையதினம் அனைத்து தொழிற்சங்கங்களும் தமது பணிகளை ஆரம்பித்துள்ளன. நாட்டில் பணிபுரியும் வர்த்தகத்தினரை அடக்க முயற்சிக்கும் தரப்பினருக்கு எங்களின் எதிர்ப்பையும், எச்சரிக்கையையும் விடுக்கும் முகமாக மாத்திரமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதே அன்றி பொதுமக்களை இன்னலுக்கு உட்படுத்தும் நோக்கம் இல்லை.

அரசாங்கம் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு இந்த நாட்டில் உள்ள மக்கள் முழுமையாக ஆதரவு வழங்குவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தில் உள்ளவர்கள் தங்களின் பேச்சில் அதனை உறுதிப்படுத்த முனைகிறார்கள். அதுமட்டுமன்றி ஒரு சிலர் மிகைப்படுத்திக் கூறுகிறார்கள். ஜனாதிபதி ஊடகப் பிரிவு இயங்கும் விதம் உண்மையில் வெட்கக் கேடாக இருக்கின்றது.

ஆனால் பொதுமக்கள் உண்மை நிலைமையை தற்போது உணர்ந்து விட்டார்கள். இடியமீனின் ஆட்சியில் இடம் பெற்றது போன்ற அடக்கும் முறைகள் தற்போது இடம் பெறுகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (ம-7)

# களுத்துறை பிரதேச சபைக்கான தேர்தலுக்கு நீதிமன்றம் தடை

(களுத்துறை)

களுத்துறை பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக உயர் நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

நவ லங்கா சுதந்திரக் கட்சியினால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு தொடர்பில் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் வரை இந்த தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் இந்த மனு நேற்று பரிசீலிக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

களுத்துறை பிரதேச சபைக்கான நவ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தி, அக்கட்சியின் பொதுச் செயலாளர் திலக் வராகொட மற்றும் அதன் களுத்துறைக்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர் செனால் வெல்கம ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்தனர்.

மனுதாரர்கள் தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட பல தரப்பினரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர்.

பிரதிவாதிகளான தேர்தல் ஆணைக்குழு குறித்த மனுதொடர்பில் ஆட்சேபனைகள் இருந்தால் இரண்டு வாரங்களுக்குள்ளும், மனுதாரர்கள் இரண்டு வாரங்களுக்குப் பிறகும் ஆட்சேபனை மனுக்களை தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு எதிர்வரும் மே 12ஆம் திகதிவரை வாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-7)

# திருவள்ளுவர் சிலை இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை சுற்று வட்டப் பகுதியில் TILKO CITY HOTEL நிறுவனத்தினால் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலையின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

TILKO CITY HOTEL நிறுவன உரிமையாளர் தி.திலகராஜ் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாட்ட செயலாளர் சிவபால சுந்தரன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ், யாழ். பல்கலையின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறி.சற்குணராசா, யாழ் மாநகரசபையில் பதில் முதல்வர் து.ஈசன், யாழ் மாநகர சபையின் ஆணையாளர் ஜெயசீலன் மற்றும் யாழ் மாநகரசபையின் முன்னால் முதல்வர்களான வி.மணிவண்ணன், இமானுவேல் ஆனல்ட் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனால் திருவள்ளுவர் சிலை திரை நீக்கம் செய்யப்படவுள்ளது. (ம-7)

# அரசு ஊடகங்களை கட்டுப்படுத்தவில்லை

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன

அரசாங்கம் ஊடகங்களை கட்டுப்படுத்த எண்ணவில்லை என்றும் ஆனால் ஊடகங்கள் அதன் நெறிமுறை தரத்தை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய பிரதமர், போலிச் செய்திகள், தவறான தகவல்களை தவிர்த்து, உண்மையான செய்திகளை மாத்திரம் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு ஊடகங்களினுடையதாகும் என தெரிவித்தார்.

போலி செய்திகளை எவ்வாறு கண்டறிவது என்பதை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது ஊடகங்களின் பொறுப்பு எனவும் மக்கள் இவை தொடர்பில் ஆர்வத்துடனிருக்க வேண்டும் என்பதோடு அவர்கள் படிக்கும் மற்றும் கேட்கும் விடயங்களை தீவிரமாக ஆராய வேண்டும் என்றும் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். (ம-7.9)


## கல்யான் தங்க நகை அடைவு கடை
## NTN தங்க நகை அடைவு கடை

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனங்களில் 01.10.2022 இற்கு முன்னர் அடகு வைக்கப்பட்ட நகைகள் யாவற்றையும் 18.03.2023 இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

குறிப்பு - 01.10.2022 க்கு முற்பட்ட நகைகள் யாவும் 20.03.2023 அன்று விற்கப்படும்.

(14926)

கல்யான் அடைவு கடை
இல.111, கஸ்தூரியார் வீதி,
செம்மா தெரு, யாழ்ப்பாணம்.
074 021 4111

NTN அடைவு கடை
இல.174, A, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.
074 051 4131


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பாதுகாப்பு விடயத்தில் இலங்கை சிறந்த நிலையில் உள்ளது

## உணவு விவசாய ஸ்தாபனம்

(கொழும்பு)

**உணவு பயிர்ச்செய்கை பாதுகாப்பு விடயத்தில் இலங்கை கடந்த ஆண்டை விட சிறந்த நிலையில் உள்ளது என உணவு விவசாய ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி விம்லேந்திரசரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,2022 இல் இலங்கையின் விவசாயத்துறை பல சவால்களை சந்தித்தது

உரங்கள் தட்டுப்பாடு காரணமாக பயிர்களிற்கு கிடைக்க வேண்டிய ஊட்டச்சத்து கிடைக்கவில்லை,அதிகரித்த பணவீக்கம் அதன் காரணமாக எரிபொருள் உட்பட விவசாயத்திற்கு அவசியமான பொருட்களின் விலைகள் அதிகரித்தமை விவசாயிகளை குறிப்பாக சிறிய விவசாயிகளை நெருக்கடியான நிலைக்கு தள்ளியது.

உலக உணவுதிட்டமும் உணவு விவசாய ஸ்தாபனமும் கடந்த மார்ச் மாதம் இணைந்து முன்னெடுத்த ஆய்வுகள் உணவுப்பொருட்களின் உயர் விலைகள் பல குடும்பங்கள் உணவுப்பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தியதால் 6.3 மில்லியன் குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதை வெளிப்படுத்தியது.

இதன் காரணமாக அந்த நிலைமையை சமாளிப்பதற்காக குறைந்தளவு உணவை உண்ணுதல், உணவை தவிர்த்தல் போன்ற நடவடிக்கைகளில் நலிந்த நிலையிலிருந்த குடும்பங்கள் ஈடுபட்டன. இதனால் இலங்கையில் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பு வீழ்ச்சியடையும் நிலை காணப்பட்டது.

இலங்கை அரசாங்கம் இந்த ஆபத்தை கட்டுப்படுத்துவதற்காக இரு தரப்பு மற்றும் ஐ.நா போன்ற சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டது. மிகவும் அவசியமான உரங்களை கொண்டு வந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# வாக்குச்சீட்டு அச்சிடும் பணி இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை

## உத்தியோக பூர்வமாக அறிவிக்கத் தீர்மானம்


(கொழும்பு)

நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காத காரணத்தினால், உள் ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான தபால் மூல வாக்குச் சீட்டுகளை அச்சடிக் கும் பணி இன்னும் ஆரம் பிக்கப்படவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு விற்கு அறிவிக்க அரச அச்சக அலுவலகத்தின் பிரதானி கங்கானி லியனகே தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பு எழுத்து மூலம் திணைக்களத்திற்கு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான தபால் மூல வாக்குகளை அச்சிடுவதற்கு தேவையான நிதியை வழங்குமாறு திறைசேரியிடம் அரசாங்க அச்சக அலுவலகம் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும், இது தொடர்பான கோரிக்கை தொடர்பில் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என கங்கானி லியனகே தெரிவித்துள்ளார். (நி)



இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று காலை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பாக இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

# வெளிநாட்டுப் பயணங்களுக்கான அரச கொடுப்பனவுகள் 'கட்'

(கொழும்பு)

அரச துறை சார்ந்த அதிகாரிகளுக்கான உத்தியோக பூர்வ வெளிநாட்டுப் பயணங்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் அது தொடர்பான செலவுகள் மட்டுப்படுத்தப்படவுள்ளன.

மார்ச் 20 ஆம் திகதி முதல் இந்த கொடுப்பனவுகளை மட்டுப்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டிலிருந்து வெளியேறும் பெருமளவிலான அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், ஆளுநர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், நகர முதல்வர்கள், பிரதேச சபைகளின் தலைவர்கள் ஆகியோருக்கான பொழுது போக்கு கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, தினமொன்றுக்கு 40 அமெரிக்க டொலர்கள், 30 நாட்கள் என்ற கொடுப்பனவு முறையை 25 டொலர்கள் 15 நாட்கள் என்ற அளவில் மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழுவை வழிநடத்தும் அமைச்சின் செயலாளரின் வேண்டுகோளின் பேரில் வழங்கப்படக்கூடிய 750 அமெரிக்க டொலர் பொழுது போக்கு கொடுப்பனவை முற்றாக இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி)

# இலங்கை ரூபாவிற்கு எதிரான டொலரின் பெறுமதி 1000 ரூபாவைத் தாண்டும்

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை

(கொழும்பு)

ரூபாவை மிதக்க அனுமதித்தால் இலங்கை ரூபாவிற்கு எதிரான டொலரின் மதிப்பு 1000 ரூபாவை தாண்டும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க எச்சரித்துள்ளார்.

நிகழ்வொன்றில் வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கூறுகையில், பொருளாதார நடவடிக்கைகளோ அல்லது முடிவுகளோ பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தவில்லை. இது பல தசாப்தங்களாக நடந்து வரும் விவகாரம்.

வெளிநாட்டுப் பணப்பரிவர்த்தனையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இந்நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு காரணமாகும்.

இங்கு அடிப்படை தவறு அரசாங்கமோ, அமைச்சரவையோ, நிதிக் கொள்கையோ அல்ல.

இதேவேளை மக்கள் நிவாரணம் கேட்கின்றனர். என்ன கேட்கிறீர்கள் என்பதை மக்களாகிய நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் கேட்பதை அரசாங்கம் கொடுத்தால், அது பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுக்கும். பிறகு உங்களுக்கு நல்லது எதுவும் நடக்காது. அத்துடன் நாட்டிற்கும் நன்மை எதுவும் நடக்காது.

அத்துடன் இறக்குமதி சுமை நாளுக்கு நாள் அதிகரிப்பு மற்றும் பணத்தைக் கண்டுபிடிக்க மாற்று வழியின்மை என்பனவற்றின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி ரூபாயை மிதக்க அனுமதித்தது.



இதன்போது டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை 203 ரூபாவாக குறைக்கும் சந்தர்ப்பம் மத்திய வங்கிக்கு கிடைத்தது.

கடன் முகாமைத்துவம் இன்றி ரூபாவை மிதக்க அனுமதித்தால் இலங்கை ரூபாவிற்கு எதிரான டொலரின் மதிப்பு 1000 ரூபாவிற்கு சென்றே நிற்கும்.

இறுதியில் எடுக்க வேண்டிய முடிவுகளை முதலிலேயே எடுப்பது சரியில்லை. அதன் மூலம் ஒரு நாட்டின் பொருளாதாரம் அழிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். (நி)

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல தங்கியிருந்த 17 பேர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடற்கரையில் இருந்து சட்டவிரோதமாக படகு மூலம் வெளிநாட்டிற்கு செல்வதற்காக வீடு ஒன்றில் தங்கியிருந்த முல்லைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த 3 சிறுவர்கள் 5 பெண்கள் 8 ஆண்கள் மற்றும் அவர்களுக்கு உதவி புரிந்து வந்த ஒருவர் உட்பட 17 பேரை நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரகசியமாக கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சுவிஸ் கிராமத்திலுள்ள வீடு ஒன்றை சம்பவதினத்தன்று இரவு 7 மணியளவில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலாக பொலிஸ் குழுவினர் சுற்றிவளைத்தனர்.

இதன்போது சட்டவிரோத ஆட்கடத்தல் மாபியாவைச் சேர்ந்த ஒருவர் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த 16 பேரிடம் பணத்தை வாங்கி கொண்டு மட்டக்களப்பு கடலில் இருந்து படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதாக தெரிவித்து அவர்களை அழைத்து வந்து மட்டக்களப்பு சுவிஸ் கிராமத்தில் வீடு ஒன்றை வாடகைக்கு பெற்று அங்கு கடந்த ஒரு மாதகாலமாக தங்க வைத்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (நி)

# விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் 23 நாட்கள் தாமதம்-பரீட்சைகள் திணைக்களம்

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் சுமார் 23 நாட்கள் வரை தாமதமடைந்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டாலும் இதுவரை போதுமான ஆசிரியர்கள் விடைத்தாள் திருத்தும் பணிகளுக்காக இணைந்து கொள்ளாத காரணத்தினால் உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை உரிய முறையில் ஆரம்பிக்க முடியாதுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

தமது தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளின் மேற்பார்வை செயற்பாடுகளுக்காக இணைந்து கொள்ளாமை தொடர்ந்தும் இந்த நடவடிக்கை தாமதமடைய காரணமாக அமைந்துள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 உலகக்கிண்ண கால்பந்தில் மொத்தம் 104 ஆட்டங்கள்

## 48 அணிகள் பங்கேற்பு



உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாக்களில் ஒன்று உலக கிண்ண கால்பந்து போட்டியாகும்.

ஒலிம்பிக் போட்டியை போலவே உலக கிண்ண கால்பந்து 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது.

கடைசியாகஉலககிண்ண கால்பந்து போட்டி கடந்த ஆண்டு கட்டாரில் நடைபெற்றது. கட்டாரில் நடந்த 22 ஆவது உலக கால்பந்து போட்டியில் ஆர்ஜென்டீனா சாம்பியன் பட்டம் பெற்றது.

மெஸ்சி தலைமையிலான அந்த அணி இறுதிப் போட்டியில் பிரான்சை வீழ்த்தியது. 23 ஆவது உலக கோப்பை கால்பந்து போட்டி கனடா, மெக்சிகோ, அமெரிக்காவில் நடத்தப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு ஜூன் 11 ஆம் திகதி முதல் ஜூலை 19 ஆம் திகதி வரை இந்த போட்டி நடைபெறும். இந்த உலகக் கிண்ண போட்டியில் மொத்தம் 48 நாடுகள் பங்கேற்கின்றன.

கடந்த உலக கிண்ணத்தை விட 16 நாடுகள் கூடுதலாகும். கட்டார் உலக கிண்ண போட்டியில் 32 அணிகள் பங்கேற்றன.

உலக கிண்ணத்தில் விளையாடும் 48 அணிகளும் 12 பிரிவாக பிரிக்கப்பட்டு உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் 4 நாடுகள் இடம் பெற்று இருக்கும்.

முதலில் 16 பிரிவாக பிரிக்க முடிவு செய்யப்பட்டது. அதாவது ஒரு பிரிவில் 3 நாடுகள் இடம் பெறுவது என்று திட்டமிடப்பட்டது. தற்போது சர்வதேச கால்பந்து சம்மேளனம் அதை மாற்றி 12 பிரிவாக பிரிக்கப்படும் என்று அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

மொத்தம் 104 ஆட்டங்கள் நடைபெறும். கட்டார் உலக கிண்ணத்தை விட 40 போட்டிகள் கூடுதலாகும். கடந்த உலக கிண்ணத்தில் மொத்தம் 64 ஆட்டங்கள் நடத்தப்பட்டது. (4)

# டெல்லி அணியின் கப்டனாக டேவிட் வார்னர் நியமனம்




2023 ஐபிஎல் தொடர் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாக உள்ளது. இந் நிலையில் டெல்லி அணிக்கு புதிய கப்டன் அறிவிக்கப் பட்டுள்ளது. டெல்லி அணியின் கப்டனாக ரிஷப் பண்ட் செயற்பட்டு வந்தார். அவர் கடந்த ஆண்டு டிசெம்பரில் கார் விபத்தில் சிக்கி குணமடைந்து வருவதால் இந்த சீசனில் ரிஷப்பண்டிற்கு பதிலாக வார்னர் கப்டனாக செயற்பட உள்ளார் என டெல்லி நிர்வாகம் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

மேலும் துணை கப்டனாக இந்திய அணியின் ஒல் ரவுண்டர் அக்சர் படேல் நியமிக்கப் பட்டுள்ளார். இதனை டெல்லி கப்பிட்டல்ஸ் அணியின் டுவிட்டர் பக்கத்தில் பதிவிடப் பட்டுள்ளது. அதில் டேவிட் வார்னர், அக்சர் படேல் இந்த இருவரின் தலைமையில் இந்த ஐபிஎல் 2023 சத்தமாக கர்ஜிக்க தயாராக உள்ளது என்று தலைப் பிட்டிருந்தது.

வார்னர் தனது ஐபிஎல் வாழ்க்கையை 2009 இல் டெல்லி அணியில் தொடங்கினார். ஆனால் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு மாறினார். அவர் 2016 இல் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியின் கப்டனாக செயற்பட்டு கிண்ணத்தை கைப்பற்றினார்.

போட்டியின் கடந்த பதிப்பில், வார்னர் 12 போட்டிகளில் கபிடல்ஸ் அணிக்காக 150.62 என்ற அற்புதமான ஸ்ட்ரைக் ரேட்டில் 432 ரன்கள் எடுத்தார். அந்தப் போட்டியில் அவர் ஐந்து அரை சதங்களை அடித்தார்.(4)




### கயல்


அடேய்! அட்வைஸ் பண்ணா ஒழுங்கா அட்வைஸ் பண்ணுங்கடா அது என்ன எல்லா அட்வைஸ்சையும் பண்ணி முடிச்சிட்டு அப்புறம்...



உன் மனசுக்கு என்ன தோனுதோ அதை செய்யுனு ஏன்டா குழப்பி விட்டுட்டு போறிங்க...

### தயாளன்

இருப்பவர்களுக்கு அலட்சியமாக இருக்கும்



இல்லாதவர்களுக்கு தான் தெரியும் தாய், தந்தையின் அருமை

### கம்ஷிகா

சோகம் தீர்க்கும் மருந்து மதுவிடமோ, மதகுருவிடமோ இல்லை..!!



ஆனால் நம் குழந்தைகளுடனான ஐந்து நிமிட உரையாடலில் இருக்கிறது...!!

### ஜனனி

பெண்தானே என்று
தாழ்வாக
நினைக்காதே..
அவள் அங்கீகரிக்கா
விட்டால்
உன்னை ஆண்மகன்
என்று
உலகம் ஒரு போதும்
ஏற்றுக்கொள்ளாது.

### நிறோஜன்

20 ஆயிரத்திற்கு துணி எடுத்திருக்கோம் ஏதாவது கிப்ட் கொடுங்களன் அண்ணாச்சி...

லெஜெண்ட் பட டிக்கெட் இருக்கு வேணுமா..




### ரஜனி

எங்கம்மா அடிக்கடி சொல்லும், உனக்குனு ஒருத்தி இனிமேல் பிறக்கவா போறா, எங்கயாது இருப்பானு.



அவள பார்த்து கேட்கிறேன், ஒரு மிஸ்டுகால் ஆச்சும் தாடி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Invitation for Bids (IFB)
## Office of the Regional Director of Health Services, KILINOCHCHI

1. The Chairman Regional Procurement Committee (RPC), on behalf of the Office of the Regional Director of Health Services Kilinochchi, invites sealed bids from eligible and qualified bidders for the work listed in the **table** below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
3. Interested bidders may obtain further information from the Office of the Regional Director of Health Services, Kilinochchi and inspect the bidding documents at the address Office of the Regional Director of Health Services, Kandy Road, Kilinochchi. From 9.00 am to 3.00 pm on working days.
4. A complete set of Bidding Documents in the English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Director of Health Services, Office of the Regional Director of Health Services, Kandy Road,Kilinochchi, Telephone 021 228 5932/ 021 228 5719 Fax 021 228 5931 from **17.03.2023 until 30.03.2023 from 09.00 hrs to 3.00 hrs** on the working days. Upon payment of a non-refundable fee of Three thousand Rupees. **(Rs.3,000.00).** The method of payment will be cash.
5. Bids shall be delivered in duplicate to the address at **Chairman, Regional Procurement Committee, Office of the Regional Director of Health Services, Kandy Road, Kilinochchi** on or before **10.00 am on 31st March 2023**. Late bids will be rejected. Bids will be opened at the above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
6. The bid shall be valid up to **16 th June 2023.**
7. All bids shall be accompanied by a "*Bid-Security*, as in the table below.

| Contract No. | Name of the Contract | Estimated Civil Cost without VAT (Rs.Mn) | CIDA Grade Required (Highways) | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|
| | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/KOC/RDHS/PSSP/Road/Uruth/2023 | Improvement of Internal Road at Divisional Hospital -uruththirapuram | 6.35 | C8 or C7 or C6 | 65,000.00 | 14.07.2023 | 84 days |

8. The pre-bid meeting will be held on **29.03.2023 at 03.00 pm** at the Office of the Regional Director of Health Services Office, Kilinochchi Kandy Road, Kilinochchi.

**Chairman**
**Regional Procurement Committee**
**Office of the Regional Director of Health Services, Kilinochchi.**
**T.P-021 228 5719 Fax 021 228 5931,**
**Email:rdhskoc@gmail.com/ financerdhskoc@gmail.com**

(C-6167)

# ரயிலுடன் மோதிய கார் இருவர் உயிரிழப்பு

(கண்டி)

கண்டியில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த ரயிலுடன் கொக்கல பகுதியில் கார் மோதிய தில் காரில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

கொக்கல விமானப்படை தளத் திற்கு அருகில் உள்ள ரயில் கடவையின் ஊடாக கவனக் குறைவாக பயணிக்க முற்பட்ட கார் ஒன்று இவ்வாறு விபத்துக்குள்ளா கியுள்ளது.

விபத்தின் பின்னர் காருக்குள் 2 பேர் சிக்கிக் கொண்டதையடுத்து, அவர்களைக் காப்பாற்ற அப்பகுதி மக்கள் கடுமையான பிரயத் தனத்தை மேற்கொண்டிருந்தனர்.

எவ்வாறாயினும், குறித்த இருவரும் காரின் உள்ளேயே உயி ரிழந்தனர். (நி)

## சாவகச்சேரி நகரசபை
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்


சாவகச்சேரி நகரசபையினால் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட பழைய தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் களஞ்சியபொருட்கள் (பாவிக்கப்பட்ட ரயர்கள், பற்றிகள், பனைமரம், வாகன சீற் வகைகள், வாகன உதிரிப்பாகங்கள், கதவு, நிலை, யன்னல், மின்சார உதிரிப்பாகங்கள், வெற்றுத்தார் பரல்கள்) பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. பொருட்களை அன்றையதினம் காலை 9.00 மணிமுதல் பார்வையிட முடியும் என்பதுடன் கேள்வியில் பங்குபற்றுபவர்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி மீளளிக்க முடியாத கேள்வி வைப்பு பணமாக ரூபா 500.00 ஐ சாவகச்சேரி நகரசபையில் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். கேள்வியில் சித்தியடைவோர் உரிய தொகையினை முழுமையாக செலுத்தி அன்றைய தினம் பி.ப 4.00 மணிக்கு முன்னதாக அலுவலகத்திலிருந்து பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

இடம் : சாவகச்சேரி நகரசபை வளாகம்
காலம்: 31.03.2023 (வெள்ளிக்கிழமை)
நேரம் : மு.ப 10.00 மணி

**சிவமங்கை இராமநாதன்**
**தவிசாளர்,நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**

(சி-6166)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி. அ.பாலகுமாரி அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர். **இளையதம்பி பாலசிங்கம்**

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-6168)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

# இராசிபலன்

17.03.2023
பங்குனி 03, வெள்ளிக்கிழமை
தசமி முற்பகல் 11.03 மணிவரை

உத்தரம் பின்னிரவு - 12.07 மணிவரை
சுபநேரம் -6.19-7.49 மணிவரை
இராகுகாலம்-10.49-12.19 மணிவரை

சந்திராஷ்டமம்
மிருகசீரிடம்
திருவாதிரை

வளவன்




வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




பாராட்டும் புகழும் அதிகரிக்கும் நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.




மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




பொது வாழ்வில் புகழ் கூடும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, உறவினர்கள் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வீண் விரயங்கள் ஏற்படலாம்.




நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டுவந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மன நிறைவு கூடும் நாள்.




செய்தொழில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுக் கொடுக்காதவர்கள் தங்களையே இழந்து விடுவார்கள்.

# வடக்கு பெண்களின் முயற்சிகளுக்கு மாகாண சபை உறுதுணையாக நிற்கும்

## ஆளுநர் ஜீவன் தியாகராஜா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பெண்களின் முயற்சியை ஊக்குவிப்பதற்கு வடமாகாண சபை உறுதுணையாக நிக்கும் என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை யாழ்.கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வழங்கிய வாழ்த்து செய்தியிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபை பெண்களை கண்ணியமாகவும் கௌரவமாகவும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எங்களின் நோக்கம் பெண்களுக்கு ஆரோக்கியமான குடும்பச் சூழலை உருவாக்குவது, அவர்களுக்கு அடிப்படை வீட்டு வசதி மற்றும் கல்வி உதவிகளை வழங்குவது மட்டுமல்லாமல் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும். எமது மாகாணம் திறமையான பெண்களால் நிறைந்துள்ளது. அத்தகைய பெண்களை மாகாணத்தில் வினைத் திறனாக்க பல்வேறு வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஒவ்வொரு உள்ளூராட்சி அலகுகளிலும் பெண் தொழில் முனைவோரின் தயாரிப்புகள் விற்பனையை வாரந்தோறும் நடத்துவதற்கான முயற்சிகளை மேற் கொண்டு வருகிறோம், விரைவில் அதை செயற்படுத்துவோம்.

பெண் தொழில்முனைவோரின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலம் அவர்கள் வியாபாரத்தில் வெற்றி காண விரும்புகிறோம்.

எதிர்காலத்திலும் அவர்களின் முயற்சிகளுக்கு வடமாகாணசபை உறுதுணையாக நிக்கும் என்ற. உறுதிமொழியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-104)

# இலங்கை வாழ் இந்தியர்களின் 200 ஆவது வருட நினைவேந்தல் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நண்பரின் அமைப்பு யாழ்.இந்திய துணை தூதரக அனுசரணையுடன் நடைபெறும் இலங்கை வாழ் இந்தியர்களின் 200 ஆவது வருட நினைவேந்தல் உற்சவம் நாளை மறுதினம் 19 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணி முதல் இரவு 7 மணிவரை ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் கலாநிதி சிதம்பரம் மோகன் ஏற்பாட்டில் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் யாழ். இந்திய துணை தூதுவர் ராக்கேஸ் நட்ராஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (4)

# 'உறவு' திரைப்படம் நாளை திரையிடல்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி திருவள்ளுவர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கனடா கவின் கலாலயாவின் தயாரிப்பில் உருவான திவ்வியராஜனின் "உறவு" திரைப்படம் நாளை சனிக்கிழமை மாலை 6 மணியளவில் நுங்கோடை முருகன் ஆலய முன்றலில் திரையிடப்படவுள்ளது.

ஈழம் மற்றும் புலம்பெயர் சூழலில் நன்கு அறியப்பட்ட கலைஞரும் எழுத்தாளருமான திவ்வியராஜன் ஏலவே 'சகா' என்ற திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானதோடு, பல்வேறு பாடல் ஒலிப்பேழைகளையும் தயாரித்து வெளியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது இரண்டாவது திரையோவியமான இவ் உறவு திரைப்படத்தினைக் காண அனைவரையும் ஏற்பாட்டாளர்கள் அழைத்து நிற்கின்றனர். திரைப்படக் காட்சியைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள கலந்துரையாலில் இயக்குனர் திவ்விய ராஜன் நேரடியாக இணைந்து கொள்ள வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6)




# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரண்டு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண நகர பகுதியில் உள்ள காட்வெயர் விற்பனை நிலையம் ஒன்றினை உடைத்து ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை திருடியமை மற்றும் நாவாந்துறை பகுதி ஒன்றில் வீடு உடைத்து பொருட்களை திருடியமை ஆகிய குற்றச்சாட்டில் பொம்மை வெளியைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 24 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-6-33)

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்தும், தரம் 5 மாணவர்களுக்கான செயற் பட்டு மகிழ்வோம் ஆரம்ப பிரிவு விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பூநகரி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஜோண் குயி ன்ரஸ் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4-6-90)



யாழ் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி மாணவன் சண்முகம் மதுஷன் சாரணருக்கான ஜனாதிபதி விருதினை பெற்றமைக்கான சின்னம் சூட்டும் வைபவம் கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (படம்- விஜயவாசன்)

## நல்லை ஆதீன முதல்வரின் 40 ஆவது ஆண்டு குருபூஜை

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வரின் 40 ஆவது ஆண்டு குருபூஜை ஆராதனை எதிர்வரும் 29 ஆம், திகதி காலை 11 மணியளவில் சமாதியில் எழுந்தருளி உள்ள பாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர சுவாமியினு டைய சந்நிதானத்தில் நடை பெறும் என ஆதீன பணிப்பாளர் தி.தனுரதன் அறிவித்துள்ளார். (4)

# அரசாங்கத்திற்கு எதிராக இன்று தீப்பந்தப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் சந்தியில் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகத் தீப்பந்தப் போராட்டம் இன்று இடம்பெறவுள்ளது.மின்சாரக் கட்டண உயர்வைக் கைவிடு. உணவு எரிபொருள் விலைகளைக் குறை. மக்களைப் பட்டினிச் சாவுக்குள் தள்ளாதே!. சூழ்ச்சிகளால் உள்ளூராட்சித் தேர்தலை நிறுத்தாதே!. வரிகளைச் சுமத்தி மக்களை உறிஞ்சாதே!உள்ளிட்ட பல ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து உழைக்கும் மக்களின் தீப்பந்தப் போராட்டம் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியில் இடம் பெறவுள்ளது.

இப் போராட்டத்தில் அனைத்து உழைக்கும் மக்களையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (4-6)

# பண மோசடிக் கும்பல் மக்கள் மத்தியில் நடமாட்டம்

## அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(அராலி)

சமுர்த்தி உத்தியோகத்தர் என கூறி பண மோசடியில் ஈடுபட்ட நபர் ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடமாடுவதாகவும் மக்களை அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சமுர்த்தி கொடுப்பனவு பெறும் முதியோர்களையும் அரசினால் வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவினை பெறும் முதியவர்களையும் இலக்கு வைத்து ஒரு குழு பணமோசடியில் ஈடுபட்டுவருகின்றது.

புதிதாக வந்த சமுர்த்தி உத்தியோகத்தர் என தம்மை அறிமுகப்படுத்தி 20,000 ரூபாய் எம்மிடம் தந்தால் மாதாந்தம் ஒரு தொகை கொடுப்பனவு வழங்குவோம் என கூறி முதியவர்களிடம் பணம் பறித்து செல்லும் சம்பவங்கள் உடுவில், கோப்பாய், வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மை நாட்களில் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் வயோதிப பெண் ஒருவரிடம் 19 ஆயிரம் ரூபாய் பெற்றுச் சென்றுள்ளார்.

மேற்படி சம்பவம் இடம் பெற்றிருந்த நிலையில் குறித்த சந்தேக நபர் நேற்று ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சரவணை பகுதியில் மோட்டார் சைக்கிளில் நடமாடுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த நபர் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு குறித்த நபரை கைது செய்வதற்குரிய நடவடிக்கையினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.(4-6-33-104)



யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரை பகுதி தூய்மைப்பற்று நிகழ்ச்சித்திட்டம் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றது. (படம்-ஏனெஸ்ட்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட துருக்கியில் வெள்ளம்

- 14 பேர் உயிரிழப்பு
- வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் மீட்புக் குழு

(அங்காரா)

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட துருக்கியில் கொட்டித் தீர்த்த கனமழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி, 14 பேர் உயிரிழந்தனர்.

சான்லியர்ஃபா மற்றும் அதியமான் மாகாணங்களில் பெய்து வரும் கன மழையால், வீதிகளில் வெள்ளம் கரை புரண்டோடியது.



அப்போது, வீதியில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, ஒன்றோடொன்று மோதி உருக்குலைந்தன.

பூகம்பத்தால் வீடுகளை இழந்த மக்கள் கொள்கலன்களிலும் கூடாரங்களிலும் வசித்துவரும் நிலையில், திடீர் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். (நி)

# நியூஸிலாந்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கை விடுப்பு

(வெலிங்டன்)

நியூஸிலாந்தில் உள்ள கெர்மடெக் தீவுகள் பகுதியில் நேற்று வியாழக்கிழமை 7.1 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் 10 கி.மீ (6.21 மைல்) ஆழத்தில் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க சுனாமி எச்சரிக்கை அமைப்பு தெரிவித்துள்ளது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 |
| தக்காளி | 150 | 150 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| கோவா | 60 | 80 | 100 | 120 |
| கரட் | 100 | 180 | 200 | 120 |
| பூசணி | 80 | 80 | 80 | 60 |
| புடோல் | 180 | 200 | 160 | 240 |
| வாழைக்காய் | 180 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 120 | 140 |
| பாகற்காய் | 400 | 600 | 500 | 500 |
| வெண்டக்காய் | 250 | 280 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 100 | 160 |
| பயற்றங்காய் | 200 | 150 | 150 | 160 |
| லீக்ஸ் | 200 | 220 | 250 | 250 |
| பீற்றூட் | 100 | 160 | 200 | 200 |
| கறிமிளகாய் | 300 | 250 | 250 | 350 |
| முருங்கைக்காய் | 1800 | 1800 | 1500 | 1500 |
| போஞ்சி | 240 | 250 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 150 | 140 |
| கீரை - 1 பிடி | 60 | 100 | 60 | 140 |
| தேசிக்காய் | 80 | 250 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 300 | 320 | 250 | 350 |
| வெங்காயப்பூ | 150 | 130 | 160 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 140 | 150 | 120 |


## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உப அலுவலகம்-தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர்** - பாலசுந்தரம் ஞானவேல்
**முகவரி** - அம்மன் வீதி, காளிகோவிலடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம்-09 அமலி வீதி, இல 11 இல் அமைந்துள்ள ஆதனம் சொந்தக்காரர் உரிமைகோருபவர் பாலசுந்தரம் மகள் பிரேமகௌரி என ஆதனப்பதிவேட்டில் உள்ளது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 2047 ஆம் இலக்கத்தில் 04.04.2014 ஆம் திகதியில் முடிந்த நன்கொடை உறுதிப்படி செல்லப்பா பாலசுந்தரம் பெண் தயாநிதி ஆகியோர் பாலசுந்தரம் ஞானவேலுக்கு நன்கொடையளித்துள்ளனர். குறித்த உறுதியின் தாய் உறுதி 2011 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 1222ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் செல்லப்பா பாலசுந்தரம் பெண் தயாநிதி என்பவர்களால் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று "வீமன்காமம் இறையுமான திட்டியும் தேமிக்குடும்பிச்சீமாவும்" நிலப்பரப்பு 3 பரப்பு இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஏ.கந்தசாமி அவர்கள் வரைந்த 2016/4/125-2016.05.30 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு-01 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு - பாலசுந்தரம் பிரேமகௌரியின் ஆதனம்
வடக்கு - காசிப்பிள்ளை கதிரேசுவுக்குரிய ஆதனம்
மேற்கு - காசிப்பிள்ளை கதிரேசுவுக்குரிய ஆதனமும் ஒழுங்கையும்
தெற்கு - ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை பாலசுந்தரம் ஞானவேல் எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உப அலுவலகம்-தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர்** - தனிகாசலம் பாபுஜி பெண் பிரேமகௌரி
**முகவரி** - அம்மன் வீதி, காளிகோவிலடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேச சபை, தெல்லிப்பளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம்-09 அமலி வீதி, இல 11 இல் அமைந்துள்ள ஆதனம் சொந்தக்காரர் உரிமைகோருபவர் பாலசுந்தரம் மகள் பிரேமகௌரி என ஆதனப்பதிவேட்டில் உள்ளது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 3118ஆம் இலக்கத்தில் 17.09.2017 ஆம் திகதியில் முடிந்த சீதன உறுதிப்படுத்தல் உறுதிப்படி செல்லப்பா பாலசுந்தரம் மற்றும் செல்லப்பா பாலசுந்தரம் பெண் தயாநிதி ஆகியோர் தனிகாசலம் பாபுஜி பெண் பிரேமகௌரிக்கு சீதனமளித்துள்ளனர். குறித்த உறுதியின் தாய் உறுதி 2046 ஆம் இலக்கத்தில் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் ஜெயச்சித்திரா சிறிதரன் நன்கொடை உறுதி மூலம் செல்லப்பா பாலசுந்தரம் பெண் தயாநிதி அவர்களால் நன்கொடை அளிக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று "வீமன்காமம் இறையுமான திட்டியும் தேமிக்குடும்பிச்சீமாவும்" நிலப்பரப்பு 3 பரப்பு இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஏ.கந்தசாமி அவர்கள் வரைந்த 2016/4/124-2016.05.30 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு-01 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு - ஒழுங்கையும் வாய்க்கால் வழியும்
வடக்கு - காசிப்பிள்ளை கதிரேசுவுக்குரிய ஆதனம்
மேற்கு - மிகுதி ஆதனம்
தெற்கு - ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை தனிகாசலம் பாபுஜி பெண் பிரேமகௌரி எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(14918)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 129





சின்னப் பழுவேட்டரையர் அங்கிருந்த ஏவலாளர்களில் ஒருவனைப் பார்த்து, "இந்தப் பிள்ளையை நமது அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போ! விருந்தாளி விடுதியில் வைத்து வேண்டிய வசதிகள் செய்து கொடுத்துப் பார்த்துக் கொள்! நான் வரும் வரையில் அங்கேயே இரு!" என்றார்.

வந்தியத்தேவனும் ஏவலாளனும் வெளியே சென்ற உடன், இன்னொருவன் தளபதியிடம் பயபக்தியுடன் நெருங்கி, ஒரு ஓலைச் சுருளை நீட்டினான். "இங்கிருந்து தரிசன மண்டபத்துக்குப் போகும் வழியில் இது கிடந்தது. இப்போது சென்ற அந்தப் பையனுடைய மடியிலிருந்து விழுந்திருக்கக்கூடும்!" என்று சொன்னான்.

தளபதி அதை ஆர்வத்துடன் வாங்கிப் பிரித்துப் பார்த்தார். அவருடைய புருவங்கள் நெற்றியின் சரிபாதி வரையில் உயர்ந்து நெரிந்தன. அவருடைய முகத்தில் கொடூரமான மாறுதல் ஒன்று உண்டாயிற்று.

"ஆஹா! இளைய பிராட்டிக்கு ஆதித்த கரிகாலர் எழுதிய ஓலை. 'அந்தரங்கமான காரியங்களுக்கு உண்மையான வீரன் ஒருவன் நினைத்த காரியத்தை முடிக்கக் கூடிய தீரன் வேண்டும் என்று கேட்டிருந்தாயல்லவா? அதற்காக இவனை அனுப்பியிருக்கிறேன். இவனைப் பூரணமாக நம்பி எந்த முக்கியமான காரியத்தையும் ஒப்புவிக்கலாம்' என்று இளவரசர் தம் கைப்பட எழுதியிருக்கிறார்.

ஆ! இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. இந்த ஓலையைப் பற்றிப் பெரியவருக்குத் தெரியுமோ, என்னவோ? இவன் விடயத்தில் இன்னும் அதிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்!" என்று கோட்டைத் தளபதி தமக்குள்ளே சொல்லிக் கொண்டார். ஓலையைப் பொறுக்கிக் கொண்டு வந்தவனை அழைத்துக் காதோடு சில விடயங்களைக் கூறினார் அவனும் உடனே புறப்பட்டுச் சென்றான்.

சின்ன பழுவேட்டரையரின் மாளிகையில் வந்தியத்தேவனுக்கு ஆசார உபசாரங்கள் பலமாக நடந்தன. அவனைக் குளிக்கச் செய்து, புதிய உடைகள் அணிந்து கொள்ளக் கொடுத்தார்கள்.

நல்ல உடைகள் அணிந்து கொள்வதில் பிரியமுள்ள வந்தியத் தேவனும் குதூகலத்தில் ஆழ்ந்தான். காணாமற்போன ஓலையைப் பற்றிய கவலையைக் கூட மறந்து விட்டான்.

புது உடை உடுத்திய பின்னர் இராஜபோகமான அறுசுவைச் சிற்றுண்டிகளை அளித்தார்கள். பசித்திருந்த வந்தியத்தேவன் அவற்றை ஒரு கை பார்த்தான். பின்னர், அவனைச் சின்னப் பழுவேட்டரையர் மாளிகையின் சித்திர மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

"தளபதி வருகிற வரையில் இந்த மண்டபத்திலுள்ள அபூர்வ சித்திரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்!" என்றார்கள். இவ்விதம் சொல்லிவிட்டு, காவலர்கள் மூன்று பேர் மண்டபத்தின் வெளியில் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டே சொக்கட்டான் ஆடத் தொடங்கினார்கள்.

சோழ குலத்தின் புதிய தலைநகரமான தஞ்சைபுரி அந்த நாளில் சிற்ப சித்திரக் கலைக்குப் பெயர் பெற்றதாயிருந்தது. திருவையாற்றில் இசைக்கலையும் நடனக் கலையும் வளர்ந்தது போல் தஞ்சையில் சிற்ப சித்திரக் கலைகள் வளர்ந்து வந்தன.

முக்கியமாக, சின்னப் பழுவேட்டரையர் மாளிகையில் இருந்த சித்திர மண்டபம் மிகப் பிரசித்தி அடைந்திருந்தது. அந்த மண்டபத்துக்குள் இப்போது வந்தியத் தேவன் பிரவேசித்தான்.

சுவர்களில் பல அழகிய வர்ணங்களில் தீட்டியிருந்த அற்புதமான சித்திரங்களைப் பார்த்துப் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தான். அந்த ஆனந்தத்தில் தன்னை மறந்தான். தான் வந்த முக்கியமான காரியத்தையும் கூட மறந்தான்.

(தொடரும்..)



# சிறுவர் அரங்கம்

## ஒரே அடியில் இருநூறு பேர்



முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் செருப்புத் தைப்பவன் ஒருவன் இருந்தான்.

இங்கு யார் என்னை மதிக்கிறார்கள்? நமக்கு நல்வாய்ப்பு தலைநகரத்தில் காத்திருந்தாலும் காத்திருக்கலாம். இளவரசியைக் கூட நான் மணந்தாலும் மணக்கலாம் என்று நினைத்தான் அவன்.

அறிவு நிரம்பிய அவன் கடைக்குச் சென்று கட்டி வெண்ணெய் வாங்கினான். அதைத் தன் மேசையின் மேல் வைத்தான். நான்கு நாட்கள் சென்றன. அந்த வெண்ணெயைப் பார்த்தான் அவன். அது நிறைய ஈக்கள் இருந்தன.

தான் செய்து வைத்திருந்த செருப்பு ஒன்றை எடுத்தான். அந்த வெண்ணெயில் ஓங்கி அடித்தான். நிறைய ஈக்கள் செத்தன. ஏராளமான ஈக்கள் துடிதுடித்தன.

அவற்றை எண்ணினான் அவன். இறந்த ஈக்களின் எண்ணிக்கை இருநூறாக இருந்தது. அடிபட்டவற்றின் எண்ணிக்கை முந்நூறாக இருந்தது.

அவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. கடைத் தெருவிற்குச் சென்ற அவன் வீரர்கள் அணியும் சீருடை வாங்கினான்.

அதை அணிந்து கொண்டு கம்பீரமாகத் தலை நகரத்துக்குச் சென்றான்.

அரசவைக்குள் நுழைந்த அவன், அரசர் பெருமானே! என்னை நானே அறிமுகம் செய்து கொள்கிறேன். நான் சிறந்த வீரன். சில நாட்களுக்கு முன் நிகழ்ந்த போரில் நான் ஒருவனே இருநூறு பேரைக் கொன்றேன். முந்நூறு பேரைக் காயப்படுத்தினேன் என்றான்.

அவனை மேலும் கீழும் பார்த்தான் அரசன். உன்னைப் பார்த்தால் வீரனைப் போலத் தெரியவில்லை. தோற்றத்தை வைத்து முடிவுக்கு வரக் கூடாது. உன்னால் எனக்கு ஒரு வேலை ஆக வேண்டும் என்றான்.

கட்டளை இடுங்கள் அரசே! இந்த வாளும் என் உயிரும் இனி உங்களுடையது என்று வீரமாகப் பேசினான் அவன்.

வீரனே! தலைநகரை அடுத்து உள்ள காட்டில் ஒரு பூதம் உள்ளது. அது அவ்வப்பொழுது நாட்டிற்குள் நுழைந்து மனிதர்களைத் தூக்கிச் சென்று சாப்பிடுகிறது. எத்தனையோ வீரர்கள் அதைக் கொல்லப் புறப்பட்டார்கள்.

யாருமே உயிருடன் திரும்பவில்லை. இந்த நாட்டு மக்கள் எல்லோரும் அஞ்சி அஞ்சி வாழ்கிறார்கள், என்றான் அரசன்.

அரசே என் வீரத்திற்கு இதைப் போன்ற பெரிய வேலையைத் தான் எதிர்பார்த்தேன். நான் அந்தப் பூதத்தின் தலையைக் கொண்டு வருகிறேன். எனக்கு இளவரசியைத் திருமணம் செய்து வைப்பீர்களா? என்று கேட்டான் அவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் எதிர்காலம் எப்போதும் தாயின் செயலில் அடங்கி இருக்கிறது.

~ நெப்போலியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அன்புக்குரிய பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுடன் கதையுங்கள்

இந்தியாவின் முதற்தர செல்வந்தர் வரிசையில் இருக்கக்கூடிய பிரபல நடிகர் அமிதாப் பச்சனிடம் செய்தியாளர்கள் செவ்வி காண்கிறார்கள்.

இதன்போது ஒரு செய்தியாளர், அமிதாப் பச்சனைப் பார்த்து, நீங்கள் இந்தியாவின் முதற்தரச் செல்வந்தர்.

உங்களின் விலைமதிப்பற்ற பெரும் சொத்தாக எதனைக் கருதுவீர்கள் என்று கேட்க, அதற்கு அமிதாப் பச்சன்; என் இரண்டு பிள்ளைகள்தான் என் பெரும் சொத்து என்கிறார்.

ஆம், இந்த உலகத்தில் மிகப்பெரும் சொத்து பிள்ளைச் செல்வங்கள் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

தங்கள் பிள்ளைகளின் வாழ்வுக்காக தம்மைத் தியாகம் செய்கின்ற பெற்றோர்களின் அன்பும் பாசமும் உன்னதமானது.

ஆம், ஊன் உறக்கம் துறந்து தங்கள் பிள்ளைகளுக்காக தங்களை வருத்துகின்ற பெற்றோர்களின் நினைவெல்லாம் தம் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியதுதான்.

தங்கள் பிள்ளைகளை இந்த உலகில் வாழவைப்பதற்காக தாயும் தந்தையும் காணுகின்ற கனவு என்பது கற்பனைக்கும் எட்டாதது.

எனினும் ஓயாத உழைப்பு, வீட்டுவேலை என இயந்திரமாக இயங்குகின்ற பெற்றவர்களின் கனவுகள் சிலவேளைகளில் மெய்ப்படாமல் போகின்றபோதுதான் இந்த உலக வாழ்வு வெறுத்துப் போகிறது. தோல்வியும் துன்பமும் ஆட்கொள்கிறது.

இங்குதான் தான் பெற்ற பிள்ளையுடன் அரை மணிநேரம் செலவிட்டு அவர்களோடு நட்போடு கதைத்து அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைக் கேட்டு அதற்குப் பரிகாரம் தேடுவதற்கு நம் பெற்றோர்களில் பெரும்பாலானவர்கள் தவறிவிடுகின்றனர்.

இதுவே பிள்ளைகள் தவறான முடிவெடுப்பதற்குக் காரணமாகிறது.

உண்மை. அன்புக்குரிய பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுடன் ஒவ்வொரு நாளும் ஆறுதலாக இருந்து கதையுங்கள்.

தாயும் தந்தையும் தங்களின் உற்ற நண்பர்கள் என்பதை அவர்களிடம் நிரூபியுங்கள்.

தங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை தம் பெற்றோர்களுக்குக் கூறமுடியும் என்ற நம்பிக்கையை உங்கள் பிள்ளைகளிடம் ஏற்படுத்துங்கள்.

பாடசாலையில், தனியார் கல்வி நிறுவனங்களில், சமூகத்தில், நட்பு வட்டத்தில், சகமாணவர்களிடத்தில் இருக்கக்கூடிய கலாசார நடைமுறைகளைக் கேட்டு அறியுங்கள்.

அவர்களுக்கு உங்களைவிட, வேறு துணையும் நட்பும் நம்பிக்கையும் யாருமல்ல என்பதை நிரூபியுங்கள்.

இதுவொன்றுதான் எங்கள் பிள்ளைகளை வஞ்சகர் கூட்டத்தில் இருந்து காப்பாற்றுவதற்கான ஒரே வழி என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

# பால் நிலை மாற்றம் கொண்டவர்களின் சுதந்திரங்களை மதிக்க வேண்டும்

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு

(கொழும்பு)

பால்நிலை மாற்றம் கொண்டவர்களுக்கு உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட வேண்டுமென இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

1978 ஆம் அரசியலமைப்பின் 12.1 பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ள படி சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் சட்டத்தினால் சமமான பாதுகாப்பு என்ற அரசியலமைப்பு உத்தரவாதத்தை கருத்தில் கொள்வதுடன் பொலிஸ் அதிகாரிகள் பால்நிலை மாற்றம் கொண்டவர்களின் அடையாளம் மற்றும் செயல்முறையை அங்கீகரிக்க வேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாலின அடையாளத்தின் அடிப்படையில் பால்நிலை மாற்றம் கொண்டவர்களிற்கு எதிராக பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாரபட்சம் காட்டலாகாது என தெரிவித்துள்ள இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு இதனை பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடைப்பிடிக்கவில்லை என்றால் அது அரசியலமைப்பின் 12.2 உறுப்புரையை மீறுவதாக அமையும் எனவும் தெரிவித்துள்ளது.

பாலின அடையாளத்தின் காரணமாக பால்நிலை மாற்றம் கொண்டவர்கள் உடல்ரீதியான தாக்குதல்கள் வாய்மொழிதுஸ்பிரயோகம் மிரட்டல் மற்றும் பிறவடிவங்களிலான வன்முறைகளை பொலிஸ் நிலையங்களில் சந்திக்கின்றனர் என இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பால்நிலை மாற்றம் கொண்டவர்களிடம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தரக்குறைவான வார்த்தைகளை பிரயோகித்தால் அது அவர்களை மனிதாபிமானமற்ற முறையில் அல்லது மனோரீதியாக சித்திரவதை செய்வதாக அல்லது இழிவாக நடத்துவதாக கருதப்பட வேண்டும் என தெரிவித்துள்ள மனித உரிமை ஆணைக்குழு இது அரசமைப்பின் உறுப்புரை 11 மற்றும் அமுலில் உள்ள பிறசட்டங்களையும் மீறுவதாக அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## அச்சுவேலியில் விவசாயிகளுக்கு இலவச டீசல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட டீசல் அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

புத்தூர் கமநல சேவை பிரிவின் கீழ் பதிவு செய்த விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஆறு லீற்றர் டீசல் விகிதம் வழங்கப்பட்டன.

இதன்போது 630 விவசாயிகளுக்கு நெல் அறுவடைக்கான டீசல் வழங்கப்படுகிறது. 12 தொடக்கம் 60 பரப்பு வரையிலான விவசாயிகளுக்கே டீசல் வழங்கப்படுகின்றன.

வழங்கப்பட்ட டீசல் விவசாயிகளுக்கு போதவில்லை எனவும் மேலதிகமாக டீசல் வழங்கப்பட வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ம-7,9)

## இலங்கை சிறார்களுக்கு ஜப்பான் 1.8 மில்லியன் டொலர் நன்கொடை

இலங்கையில் அபாய நிலையில் வாழும் சிறார்களுக்கு உதவுவதற்காக ஜப்பான் அரசாங்கம் 1.8 மில்லியன் டொலரை நன்கொடையாக வழங்கியுள்ளது.

UNICEF நிறுவனத்திடம் ஜப்பான் அரசாங்கம் இந்த நன்கொடையை வழங்கியுள்ளது.

இதனூடாக 6 இலட்சத்திற்கும் அதிகமான சிறார்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீர், சுகாதார மேம்பாட்டை வழங்கவும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு தேவையான சிகிச்சைகளை வழங்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலையில், மனிதாபிமான நடவடிக்கைகளை வழங்க ஜப்பான் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக UNICEF நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த வருடம் ஆரம்பமான பொருளாதார நெருக்கடியின் முதற்கட்டத்திலிருந்து இதுவரை 3.8 மில்லியன் டொலருக்கும் அதிகமான நன்கொடைகளை ஜப்பான் அரசாங்கம் UNICEF ஊடாக இலங்கைக்கு வழங்கியுள்ளது. (ம-7,9)

## காணாமல் போன சிறுமிகள் நேற்று பொலிஸாரால் மீட்பு

(அராலி)

யாழ்ப்பாணம் - கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் இயங்கி வரும் சிறுவர் இல்லத்தில் இருந்து மூன்று சிறுமிகள் காணாமல் போன நிலையில் அவர்கள் கோப்பாய் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டனர்.

காணாமல் போன நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட சிறுமிகள் 14, 15 மற்றும் 16 வயதுடையவர்கள் ஆவர்.

இந்த சிறுமிகள் பருத்தித்துறை பகுதியில் வைத்து மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்ட சிறுமிகள், சிறுவர் இல்லத்தில் வசிப்பதற்கு விருப்பமில்லை எனத்தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின் பின்னர் சிறுமிகள் மூவரும் சிறுவர் இல்லத்தில் மீண்டும் சேர்க்கப்பட்டனர். (4-6-104)

## வவுனியாவில் கஞ்சா எரியூட்டி அழிப்பு

வவுனியா மேல் நீதி மன்றில் முடிவடைந்த வழக்குகளின் சான்றுப் பொருளான கஞ்சா எரியூட்டி அழிக்கப்பட்டன.

வவுனியா மேல் நீதி மன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று வவுனியா தாண்டிக்குளத்திலுள்ள வெற்றுக்காணியில் இவ்வாறு கஞ்சா எரியூட்டி அழிக்கப்பட்டன.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முடிவடைந்த வழக்குகளின் சான்றுப் பொருளாகக் காணப்பட்ட 100 கிலோ கிராமுக்கு அதிகமான கஞ்சா போதைப்பொருளே எரியூட்டி அழித்தொழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மேல் நீதி மன்ற பதிவாளர் மீரா வடிவேற்கரசனின் ஏற்பாட்டில் நீதிமன்ற உத்தியோகத்தர்களினால் இந்த சான்றுப் பொருள்கள் எரியூட்டி அழிக்கப்பட்டது. (ம-7,33)

## குறைந்த விலையில் சதொசாவில் அப்பியாசக் கொப்பிகள்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகளை சலுகை விலையில் வழங்குவதற்கு இலங்கை சதொச நடவடிக்கை எடுத்துள்ளதாக லங்கா சதொசவின் விற்பனைத் திணைக்களத் தலைவர் சவான் காரியவசம் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு லங்கா சதொச கடைகளில் இருந்து உயர்தர SPC பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்படும் என் அவர் தெரிவித்தார்.

அரச அச்சக சட்டப்படுத்தப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் உயர்தர அப்பியாசக் கொப்பிகள் நாடு முழுவதுமுள்ள 48 லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## நாட்டை வந்தடைந்த உர கப்பல்

(கொழும்பு)

ரி.எஸ்.பி உரத்தை ஏற்றிய கப்பலொன்று கொழும்புத் துறை முகத்தை வந்தடைந்தது.

இந்த கப்பலில் 36000 மெற்றிக் தொன் உரம் கொண்டு வரப்பட்டுள்ளது.

சேற்று உரம் எனப்படும் ரி.எஸ்.பி உரத்தை மற்றொரு கப்பலும் எதிர்வரும் நாட்களில் நாட்டை வந்தடையவுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் யு.எஸ். எயிட் நிறுவனத்தின் உதவியின் கீழ், குறித்த உரம் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. குறித்த உரத் தொகையை நாட்டிலுள்ள 12 இலட்சம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, ஒரு ஹெக்டேயருக்கு 55 கிலோகிராம் உரம் விநியோகிக்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் குறித்த உரத் தொகையை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு கூறியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் சுகாதார சேவைகளை முன்னெடுப்பதில் பாரிய சிக்கல்

## பிராந்திய சுகாதார பணிப்பாளர்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 72 இற்கும் மேற்பட்ட மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, மருத்துவர்கள் மேற்படிப்புக்காக செல்லுதல், மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான விடுதி பற்றாக்குறை, அம்புலன்ஸ் உள்ளிட்ட வாகன உதிரிப்பாகங்களின் பற்றாக்குறை, வைத்திய சாலைகளில் காணப்படுகின்ற மின் பிறப்பாக்கிகள் பழுதடைந்துள்ளமை என பல்வேறு நெருக்கடிகளால் சுகாதாரத் துறையை முன்னெடுத்துச் செல்வதில் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டு இருப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்திற்கான முன்னாயத்த கூட்டத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 72 இற்கும் மேற்பட்ட மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுவதாகவும் குறிப்பாக சத்திர சிகிச்சைகளின் போதும் காயங்களுக்கும் பயன்படுத்தும் பிளாஸ்ரர்கள் இல்லை என்றும் குறிப்பிட்டதுடன் மாவட்ட பொது வைத்தியசாலையிலுள்ள பிரேத அறையின் குளிரூட்டியும் பழுதடைந்துள்ளது.

இந்த ஆண்டில் சுகாதாரத் துறையின் அபிவிருத்தி வேலைகளுக்காக உலக வங்கியினால் கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 210 மில்லியன் ரூபாய் நிதியில் 50 மில்லியன் ரூபாய் நிதி வேறு மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் வைத்திய துறைக்கரன கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதில் நெருக்கடி நிலையேற்பட்டுள்ளது.

குறிப்பாக வேரவில் வைத்தியசாலைக்கான போக்குவரத்து பாதை சீரின்மையால் அடிக்கடி வாகனங்கள் பழுதடையும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6-315)

### போக்குவரத்து வசதியின்மையால்

# கிளி.வடக்கு கல்வி வலய ஆசிரியர்கள், மாணவர்கள் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஏழு பாடசாலைகளுக்கு உரிய போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையில் ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் நெருக்கடிகளை தொடர்ந்தும் எதிர்கொண்டு வருவதாக கிளிநொச்சி வடக்கு வலயக் கல்வி பணிமனை நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திற்கு உட்பட கண்டாவளை கல்விக் கோட்டத்தில் உள்ள பின் தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள ஏழுக்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கான போக்குவரத்து வசதிகள் எதுவும் இன்மையால் குறித்த பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் ஆசிரியர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் தொடர்ந்தும் பெரிதும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த பாடசாலைகளுக்கான போக்குவரத்து சேவைகள் தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது மேற்படி சாலையில் போதிய பேருந்து வசதிகள் இன்மை மற்றும் ஆளணிவசதிகள் இல்லாத நிலையிலே தொடர்ந்தும் சேவைகளை ஆற்றி வருகின்றோம்.

குறித்த ஆளணி வெற்றிடங்களை நிரப்புகின்ற போது சேவைகளை முன்னெடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

### காலாவதியான பொருட்கள் விற்பனை

# வெதுப்பக உரிமையாளருக்கு 45 ஆயிரம் ரூபாய் அபராதம்



(தருமபுரம்)

கிளிநொச்சியில் உள்ள பிரபல வெதுப்பகம் ஒன்றில் காலாவதியான பொருட்கள் இருப்பதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய கரைச்சி சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று முன்தினம் திடீர் சோதனை மேற்கொண்ட பொழுது காலாவதியான மனிதப் பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் விற்பனைகாக பொதிசெய்யப்பட்டிருப்பது இனங்கானப்பட்டதை அடுத்து வெதுப்பக உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

அதற்கமைய நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது வெதுப்பக உரிமையாளருக்கு 45 ஆயிரம் தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் கடும் நிபந்தனைகளுடன் வெதுப்பக உரிமையாளர் விடுவிக்கப்பட்டார். (4-6-316)

### கிளிநொச்சி பரந்தன் பகுதியில்

# சட்ட விரோத கசிப்பு உற்பத்திகளை கட்டுக்குள் கொண்டு வந்த இளைஞர்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் சிவபுரம் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் இணைந்து சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகள் மற்றும் போதைப்பொருள் பயன்பாடு உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன் வீதிகளை புனரமைத்தல், பொது இடங்களை துப்பரவு செய்தல் போன்ற செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருவதை பலரும் பாராட்டி வருகின்றனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பரந்தன் சிவபுரம் பகுதியில் கடந்த காலங்களில் அதிகரித்த போதைப்பொருள் பாவனை, கசிப்பு உற்பத்தி விற்பனை, சிறுவர் துஸ்பிரயோகங்கள், குடும்ப வன் முறைகள் என்பன அதிகரித்து காணப்பட்டதுடன் குறித்த கிராமத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட கொலை சம்பவங்களும் 19 இற்கும் மேற்பட்ட வாள்வெட்டு போன்ற வன்முறைச் சம்பவங்களும் பதிவாகியது.

இதனால் குறித்த பகுதியில் பொலிஸ் காவலரன் ஒன்றை அமைக்குமாறும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும் பொலிஸ் காவலரன் அமைக்கப்படாத நிலையில் குறித்த கிராமத்தில் அச்ச நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பகுதியில் கிராம அலுவலரின் முயற்சியால் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சமூக ஆர்வலர்களை அணுகி கலந்துரையாடல்களை மேற்கொண்டதன் விளைவாக கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்ட விரோத கசிப்பு உற்பத்திவிற்பனைகள் மற்றும் போதைப்பொருள் பாவனை என்பவற்றை பொலிஸாரின் உதவியுடன் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்கள். (4-6-315)

# கடந்த கால போகத்தில் 59 ஆயிரம் மெ.தொன் அறுவடை

## கிளிநொச்சி மாவட்ட செயலகம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த கால போகத்தில் 59 ஆயிரத்து 103 மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளம் உள்ளிட்ட பாரிய மற்றும் நடுத்தர சிறிய நீர்ப்பாசன குளங்களின் கீழும் மானாவாரிபயிர்ச்செய்கை நிலங்களின் கீழும் இம்முறை மொத்தமாக 26,582 கெக்ரேயர் நிலப்பரப்பில் காலப்போகமாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளன.

கடந்த கால போக அறுவடையின் போது 59103.85 மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட செயலக புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அதாவது கடந்த பெரும் போகத்தின் போது 26585.40 கெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் வரட்சி ,நோய்த்தாக்கம் மற்றும் இயற்கை அழிவுகள் தவிர 25919.20 கெக்ரேயர் நிலப்பரப்பில் அறுவடைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அறுவடைகளின் மூலம் 59103.85 மெற்றிக் தொன் நெல் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

# முல்லைத்தீவு மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை

## நோயாளர்கள் பாதிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் காணப்படுகின்ற வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் வவுனியா உட்பட பிற மாவட்டங்களுக்கு மேலதிக சிகிச்சைக்கு செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலைக்கு நியமிக்கப்படுகின்ற வைத்திய நிபுணர்கள் குறுகிய காலங்களுக்குள் இடமாற்றம், மேலதிக படிப்பு என சென்று விடுவதன் காரணமாக பொது வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக நோயாளர்கள் தொடர்ச்சியாக மேலதிக சிகிச்சைக்கு பிற இடங்களுக்கு அனுப்பப்பட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இது தொடர்பாக மாவட்ட மட்ட கூட்டங் களில் பல தடவைகள் கலந்துரையாடப்பட்ட போதிலும் தீர்வுகள் கிடைக்கவில்லை. முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் காணப்படு கின்ற வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறையினை தீர்ப்பதற்கு மத்திய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளை பெருமளவில் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு பொது வைத்தியசாலை உட்பட சகல வைத்தியசாலைகளிலும் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்து நிலவுகின்றது.

இதன் காரணமாக வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்கு செல்லும் மக்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர் என மேலும் தெரிவித்துள்ளனர். (4-6-350)

# நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களினதும் நிறுவைகள், அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடல் நிகழ்வு ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபை, நல்லூர் உப அலுவலகத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இடம்பெறவுள்ளது என நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனங்களை...

கூறுகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி ஆளுநருடன், இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சாந்த கமகே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது, வாகன இறக்குமதி தொடர்பான தீர்மானங்களை தம்மால் மேற்கொள்ள முடியாது எனவும் அதனை நிதியமைச்சே இறுதி செய்ய வேண்டும் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர், சாந்த கமகேவிடம் தெரிவித்துள்ளார். (ம-9,7)

## மசகு...

நேற்று கணிசமானளவு குறைந்துள்ளது.

அதன்படி, WTI மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை தற்போது 67.90 அமெரிக்க டொலர்களாக உள்ளது.

பிரண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 74.5 அமெரிக்க டொலராக குறைந்துள்ளது.

ரஷ்ய-உக்ரைன்மோதலால்உயர்ந்து வந்த மசகு எண்ணெய் விலை, 2021 ஆம் ஆண்டுக்கு பின், இத்தகைய அளவுக்கு சரிந்துள்ளது. (ம-7,9)

## இணையம் மூலம்...

அமைச்சர் சிறிபால கம்லத் தலைமையில் இருக்கை முன்பதிவு தொடர்பான இணையத்தளம் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், மூன்று மொழிகளிலும் 24 மணி நேரமும் செயற்படும் ஹொட்லைன் எண் 1315 மூலம் இருக்கைகளை முன்பதிவு செய்ய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (ம-7,9)

## அரசியல் கட்சி...

கூட்டம் நடைபெறவுள்ளது.

நேற்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில் மேற்கூறிய குழுவுடன் சந்திப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது.

மேலும், 2021ஆம் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகளை இன்று முதல் 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்கத் தவறும் அரசியல் கட்சிகளின் உரிமைகளை பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 9(3) எண் 1 இன் கீழ் இரத்து செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

1981ஆம் ஆண்டு இவ்வாறு, ஆணையத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கத் தவறினால், சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலில் இருந்து நீக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## தமிழர்களின்...

இலங்கையில் குடியேறிய மலையகத் தமிழர்களின் வாழ்வாதாரம் முன்னேற, தலா 28 லட்ச ரூபாய் மதிப்பில், 4000 வீடுகளை அமைக்கும் ஒப்பந்தம் இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களிடையே அண்மையில் கைச்சாத்தானது.

இந்தியாவின் நாகரிக இரட்டை நாடான இலங்கையில் வசிக்கும் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக, பிரதமர் மோடி தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் நலத்திட்டப் பணிகளில், இது ஒரு மைல்கல் ஆகும்' என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார். (ம-7,9)

## உள்ளூராட்சித்...

யிலான விசேட சந்திப்பொன்று நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்குத் தனது பாராட்டுக்களைத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,

தேர்தல்களை நடத்துவதன் ஊடாக இந்நாட்டு மக்களின் இறையாண்மை அதிகாரத்தை உறுதிப்படுத்தும் முகமாக ஐ.நாவின் கூடிய ஈடுபாட்டின் அவசியத்தையும் அவர் இங்கு சுட்டிக் காட்டினார். (ம-7,9)

## நிரந்தரமான...

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது உள்ள அரசியலைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலமாகவோ அல்லது அதனை மாற்றியமைப்பதன் மூலமாகவோ தமிழர் பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வினை வழங்க முடியாது.

அனைத்து இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு அதன்மூலம் தமிழருக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்பட வேண்டும்.

தென்னிலங்கை மக்களால் நிராகரிக்கப்படும் தீர்வு ஒருபோதும் தமிழருக்கு நிரந்தர தீர்வாக அமையாது, இதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் கூறியதாக அநுரகுமார குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு தமிழர் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## வலி.கிழக்கு ...

பிரதேச சபை உறுப்பினரும் அவரது மனைவியும் ஆலய திருவிழாவில் கலந்து கொண்டுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது அவர்களை பின்தொடர்ந்த மூவர் அவர்களின் வீட்டிற்கு முன்பாக வழிமறித்து மனைவி அணிந்திருந்த தங்க நகைகளை அறுக்க முற்பட்டுள்ளனர்.

இதன்போது பிரதேச சபை உறுப்பினரும் மனைவியும் நகைகளை அறுப்பதை தடுக்க முற்பட்ட பொழுது அவர்கள் இருவர் மீதும் வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து அங்கு திரண்டவர்கள் இருவரையும் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,9,33,104)

## தேர்...

பாளர் றோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

பஃவ்ரல் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போதுள்ள நிலைவரத்தை அவதானிக்கும் போது ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தல் நடைபெறுவதற்கான எந்தவொரு சாத்தியக் கூறும் தென்படவில்லை. தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் ஆரம்பத்திலிருந்தே முன்னின்று செயற்பட்ட அமைப்பு என்ற ரீதியில் பஃவ்ரல் அமைப்பு இந்நிலை எண்ணி கவலை கொள்கிறது.

அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள வாக்குரிமையை அரசாங்கம் பறிக்கும் என்று நாம் ஆரம்பத்தில் நம்பவில்லை. சற்று காலம் தாமதித்தேனும் தேர்தல் நடத்தப்படும் என்று நம்பிக்கை கொண்டிருந்தோம்.

ஆனால் நீதிமன்ற உத்தரவைக் கூட கவனத்தில் கொள்ளாத வகையிலேயே அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

அரசியலமைப்பு சபை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை என்பன சமநிலையில் காணப்பட்டால் மாத்திரமே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். ஆனால் இன்று இந்த சமநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் நிறைவேற்றதிகாரத்தினால் தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் தற்போது பாராளுமன்றமும் அவ்வாறான நடவடிக்கைளில்ஈடுபடுகின்றமையை அவதானிக்க முடிகிறது என்றார். (ம-7,9)


### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 16/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1516
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 2 2 5 4 8 5
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2023.03.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1091
C 51 63 68 78
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7600 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### கொவிசெத

திகதி 2023.03.16
சீட்டிழுப்பு இலக்கம் 3303
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 20 32 58 78
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 16/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1409
D 16 30 41 63 66
வெற்றி இலக்கங்கள்

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.16
சீட்டிழுப்பு இலக்கம் 370
வெற்றி இலக்கங்கள்
தனுசு 16 45 50 59 தனுசு
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/03/16
சீட்டிழுப்பு இலக்கம் 5061
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
T 9 6 4 8 0 9
தேசிய லொத்தர் சபை

### அத கோடிபதி ADA KOTIPATHI

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1862
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.03.16
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,589,340/-
வெற்றி இலக்கங்கள் 10 38 42 56
ஆங்கில எழுத்து G
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சங்வர்தன வாசனாவ

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 579 | திகதி 2023-03-16 | வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 13 52 58
விதி எண் 01
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 18,074,836/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 21 11 43 63 77
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1212
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2023.03.16 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 313,925,512.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,654,202/-
திகதி 2023-03-16
வெற்றி வாரம் 3748
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 09 14 19 58
கன்னி
ரூ.500/- பரிசுகளுக்கான 2532
ரூ.100/- பரிசுகளுக்கான 191
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,822,840/-

### சனிதா Shanida

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.16
சீட்டிழுப்பு இல : 4197
வர்ணம் : சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,396,680/-
வெற்றி இலக்கங்கள் 22 29 45 61
ஆங்கில எழுத்து P
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2036 | நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.03.16 | தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
Q 30 48 56 62
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,537,260/-
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47
www.dlb.lk


### வலம்புரி VALAMPURI

சீட்டிழுப்பு வாரம் 003
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.16
வெற்றி இலக்கங்கள் 14 34 44
கும்பம்
ரூ.10,000 பரிசுக்கான
விசேட இல - 1708
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.32,084,300/-
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தத்தை விளக்க தேரர்களை சந்திப்பதற்கு தயார்

## விக்னேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் விளக்க மகாநாயக்க தேரர்களை சந்திக்க தயாராகவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மகாநாயக்க தேரர்கள் உட்பட பௌத்தமதகுருமார்களின் கடும் எதிர்ப்பை தொடர்ந்து ஜனாதிபதி 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து பேசுவதை நிறுத்தியுள்ளார் என சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சமீபத்தைய யாழ்ப்பாண விஜயத்தின்போது ஜனாதிபதி 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவேண்டும் என என்னிடம் தெரிவித்திருந்தார் என விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பௌத்தமதகுருமாரின் எதிர்ப்பை தொடர்ந்து அது குறித்த முயற்சிகளை ஜனாதிபதி கைவிட்டுள்ளார் அவர் அது குறித்து பேசுவதில்லை என விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி 13ஆவது திருத்தம் தொடர்பான தனது திட்டத்தை கைவிட்டுவிட்டார் என நான் கருதவில்லை ஆனால் மகாநாயக்க தேரர்களின் எதிர்ப்பினால் அதனை அவர் ஒத்திவைத்துள்ளார்.

என நான் கருதுகின்றேன் என தெரிவித்துள்ள விக்னேஸ்வரன் நான் மகாநாயக்க தேரர்களிற்கு பகிரங்க கடிதமொன்றை எழுதியுள்ளேன் சமீபத்தில் நான் எழுதிய கடிதத்திற்கு அவர்கள் பதிலளிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நான் அவர்களை சந்தித்து இது குறித்து தெளிவுபடுத்த தயார் அவர்கள் உரிய தெளிவின்றி 13ஆவது திருத்தத்தை எதிர்க்கின்றனர் நாங்கள் உரிய விடயங்களை தெளிவுபடுத்த தயார். ஆனால் அவர்கள் எங்களை சந்திக்க தயாரில்லை எனவும் தெரிவித்துள்ள விக்னேஸ்வரன் 13திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன் என ஜனாதிபதி தொடர்ந்தும் தெரிவிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-7,9)

# ஐ.எம்.எப்பால் நாட்டை காப்பாற்ற முடியாது

## விஜித ஹேரத்

(கொழும்பு)

ஊழல் மோசடிகளை இல்லாதொழிக்காமல் சர்வதேச நாணய நிதியத்தின் மாயாஜாலத்தால் நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியாது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி கம்பஹாவில் நடத்திய மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் பதினைந்து நிபந்தனைகளை விதித்துள்ளதாகவும், எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பது, ரூபாயின் பெறுமதி குறைப்பு, அரச நிறுவனங்களை விற்பனை செய்தல் உள்ளிட்ட 15 நிபந்தனைகளை பூர்த்தி செய்த தன் பின்னரே பணம் இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு முன்னர் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை இலங்கை பெற்றிருந்த போதிலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொருளாதாரம் வலுவாக இருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

திருட்டு, ஊழல், வீண் விரயத்தை ஒழிக்காமல் சர்வதேச நாணய நிதியத்தின் மாயா ஜாலத்தைக் காட்டினாலும் நாட்டைக் காப்பாற்ற முடியாது என்றும் அவர் கூறினார். நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு உற்பத்திப் பொருளாதாரம் உருவாக்கப்பட வேண்டும். அரசியல் கலாசாரத்தை மாற்றி குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,9)

# ஐ.எம்.எப் அங்கீகாரம் 20 ஆம் திகதி கிடைக்கும்

## இராஜாங்க அமைச்சர் செகான்

(கொழும்பு)

சர்வதேச நாணயநிதியத்தின் நாணயசபையின் அங்கீகாரம் எதிர்வரும் 20ஆம் திகதி கிடைக்கும் என நம்பிக்கை கொண்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் செகான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவி இலங்கைக்கு கிடைத்ததும் அடுத்த நான்கு வருடங்களில் இலங்கைக்கு 7 பில்லியன் டொலர் கிடைக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஏழு பில்லியன் டொலர் என்பது தாங்கள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ள நிதியமைப்புகள் மற்றும் இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் மூலம் கிடைக்கப்போகின்றது எனவும் அவர் கூறியுள்ளார். (ம-7,9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
076 097 3127

வேலையாட்கள் தேவை
இயக்கச்சி, நாவற்குழி, மயிலிட்டி மற்றும் சுழிபுரத்தில் அமைந்துள்ள விவசாய பண்ணைக்கு வேலையாட்கள் தேவை.
தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
தொ.பே இல. : 021 222 7944
(14924)

பெரிய அரசடி சன சமூக நிலையம்
சங்கத்தானை சாவகச்சேரி
வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் - 2023
இடம் : சனசமூக நிலைய பொது மண்டபம்
காலம் : 02.04.2023 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மாலை 3 மணி
அனைத்து அங்கத்தவர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
சங்கத்தானை சாவகச்சேரி
செயலாளர்
(14925)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2023
மேற்படி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 02.04.2023ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
மத்தியின் மணிக்கொடி நித்திலம் நிலைக்கும்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யாழ். மத்திய கல்லூரி
தொடர்புகளுக்கு
077 605 7836

உடனடி வேலை வாய்ப்புக்கள்
EXECUTIVE OFFICER
✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைக்குரித்த உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)
(C-6169)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
(C-6169)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

நேரடி
இறுதிக் கருத்தரங்கு
2023
25 மார்ச்
ஆசிரியர் போட்டிப் பரீட்சை
சனி, ஞாயிறு 8.30 AM - 2.30 PM
T.தவசேகர் | P.கமல்தாசன்
சிங்கள மொழி இறுதி கருத்தரங்கு வினாக்களின் தமிழ் பெயர்வு மற்றும் இலகு நுட்ப வழிகாட்டல்
இரு நாட்கருத்தரங்கு மொத்தகட்டணம் - 1200/=
அச்சடிக்கப்பட்ட குறிப்புகளுக்கு கட்டணம் அறவிடப்படும்.
பட்டப்படிப்பு கல்லூரி 076 688 3394
ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம் 077 526 5344
(C-6170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.